https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் வேளாண்மை

**முனைவர் வெ. பரிமளம்**
உதவிப்பேராசிரியர், தமிழ்இலக்கியத்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி

**ஆய்வுச் சுருக்கம்**

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறநெறியை உணர்த்தும் நூல்கள். அவை அறநெறியை நேரடியாகவும் வேளாண்மையை மறைமுகமாகவும் விளக்குகிறது. வேளாண்மை சார்ந்த அறநெறிகள், உணவுப் பகிர்வு, சுற்றத்தாரோடு நல்லுறவு போன்ற வாழ்க்கைக்கு அடிப்படையான பல கருத்துகளை உவமைகளாகவும், நீதிகளாகவும் அறநூல்கள் எடுத்துரைக்கின்றது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் உழவுத் தொழிலை வெறும் தொழிலாக மட்டும் பார்க்காமல், அறம், சமூகம் மற்றும் வாழ்வியலுடன் இணைந்த ஒரு உயர்வான செயலாகப் போற்றியதை அறியமுடிகிறது.*

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சங்க இலக்கியத்திற்குப் பின்னர் தோன்றியவை. கி.பி. 4ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் இயற்றப்பட்ட 18 நூல்களின் தொகுப்பாகக் கீழ்க்கணக்கு நூல்கள் அமைகின்றன. இவை பெரும்பாலும் அறநூல்களாக அமைகின்றன. இவை அறம், அகம், புறம் சார்ந்த நூல்களாக இருப்பினும் வேளாண்மை குறித்த பல்வேறு செய்திகள் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளன. வேளாண்மை பற்றிய தகவல்கள் நேரடியாகவும் சில நூல்களில் மறைமுகமாகவும் காணப்படுகின்றன.*

## வேளாண்மையில் உழவு

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தலையானதாகக் கருதப்படும் திருக்குறள் வேளாண்மை யின் சிறப்பை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது. "உழவு" என்ற அதிகாரமே உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தையும், உலகிற்கு உணவளிக்கும் உழவர்களின் உயர்வையும் விளக்குகிறது. உலகம் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும், அது ஏருக்குப் பின்னால்தான் நிற்கிறது. ஆகையால், எவ்வளவு துன்பம் இருந்தாலும் உழவுத் தொழிலே முதன்மையானது என்பதை,*

> சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
>
> உழந்தும் உழவே தலை - *1031*

என்கிறது. இது உழவுத் தொழிலே உலக இயக்கத்திற்கு அடிப்படை என்பதை வலியுறுத்துகின்றது. பிறர் கையை எதிர்பார்க்காமல், தாமே உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு உண்பவர்களே உண்மையாக வாழ்பவர்கள். மற்றவர்களெல்லாம் உழவர்களைத் தொழுது, அவர்களைப் பின்தொடர்ந்து வாழ்பவர்களே ஆவர் என்பதை,

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்

தொழுதுண்டு பின் செல்பவர் - 1033

என்கிறது. இது உழவர்களின் சிறப்பை விளக்குவதாக அமைகிறது. உழவுக்குத் தேவையான ஏரைக் கொண்டிருப்பவன் வேளாண்மை செய்வது மிகவும் இனிமையானது என்பதை இனியவை நாற்பது

ஏருடையான் வேளாண்மை தானினிது - 3

என்கிறது. ஏர் இல்லாதவன் பிறரை எதிர்பார்த்து தான் உழவுத் தொழிலை செய்ய வேண்டும் என்பதை இவ்வடிகள் தெளிவுபடுத்துகிறது.

## உணவு உற்பத்தி

வேளாண் வேதம் என்று போற்றப்படும் நாலடியார் வேளாண்மை பற்றி நேரடியாக ஒரு சில இடங்களில் குறிப்பிட்டிருந்தாலும், பல கருத்துகள் வேளாண்மை மற்றும் உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை, பிற அறங்களுடன் தொடர்புபடுத்தியே விளக்குகின்றன. வேளாண்மை மூலம் கிடைக்கும் செல்வத்தப் பசியின்றி வாழும் வகையில் பலரோடும் கூடிப் பகிர்ந்து உண்ண வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இதை,

துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டும்

பகடு நடந்தகூழ் பல்லாரோடு உண்க

(நாலடியார்-2)

என்கிறது. குழந்தைகள் பசியின்றி உண்ண வேண்டுமெனில், உணவு உற்பத்தி முக்கியமானதாகும். உணவு உற்பத்திக்கு வேளாண்மை அவசியம். எனவே, வேளாண்மை செழித்து உணவுப் பொருட்கள் கிடைத்தால் மட்டுமே குழந்தைகள் பசியின்றி உண்ண முடியும். இது சமூகத்தின் அடிப்படையான தேவையை, அதாவது உணவின் தேவையையும், அதை வழங்கும் வேளாண்மையின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டுகிறது. இதை,

குழவி இடாஅமை உண்பது இனிதே

(இனியவை நாற்பது - 30)

என்பதால் அறியலாம். இதில் நேரிடையாக வேளாண்மையைக் கூறவில்லை. இருப்பினும் மக்கள் பசியின்றி வாழ வேளாண்மை முக்கியமானது என்பதை வலியுறுத்துகிறது.

## பயிர் பராமரித்தல்

வேளாண்மையின் ஒரு பகுதி செடி, கொடிகள், மரங்களைப் பராமரிப்பது ஆகும். பாக்கு போன்ற மரங்களுக்கு நாள்தோறும் நீர் இறைப்பது அவசியம், தென்னை போன்ற மரங்களுக்கு வளரும் வரை நீர் பாய்ச்ச வேண்டும். பனை போன்ற மரங்களுக்கு விதைத்த பிறகு குறைந்த பராமரிப்பு செய்தாலும் பெரும் பயன் தரும் என்கிறது.

கடையாயர் நட்பில் கமுகனையர் ஏனை

இடையாயர் தெங்கின் அனையர்- தலையாயார்

எண்ணரும் பெண்ணை போன்(று) இட்ட

ஞான்றிட் டதே பயிர் – நாலடியார் - 216

என்பதில் நேரிடையாக வேளாண்மை பற்றிய குறிப்பு இல்லை. ஆனால் அவ்வாறு பொருள் கொள்ள இடமுண்டு. பயிர்களின் தன்மைக்கேற்ப பராமரிப்பின் முக்கியத்து வத்தை அறியமுடிகிறது. பகைவர் இல்லத்தில் கிடைக்கும் சுவையான உணவை விட, அன்பான சுற்றத்தாரிடம் கிடைக்கும் எளிய உணவு இனிமையானது என்பதை, வேளாண்மை என்ற சொல்லைப் பயன்படுத்தி விளக்குகிறது நாலடியார். இதை,

நாள்வாய்ப் பெறினும் தம் நள்ளாதார் இல்லத்து

வேளாண்மை வெங்கருணை வேம்பாகும்; கேளாய்,

அபராணப் போழ்தின் அடகிடுவ ரேனும்

தமரா யார் மாட்டே இனிது - 207

என்பதால் அறியலாம். இங்கு 'வேளாண்மை' என்பது உணவளித்தல், உபசரித்தல் என்ற பொருளில் வருகிறது.

கரும்பொன் கொழுங்கொம்பர்
காழ்கொள்ளா ஆங்கு

அரும்பெறற் கல்வியும் மாண்டஅறிவும்

பெரும் பொருளார் கண்ணே அடும் அன்றி

வன்கணார் கண்ணேயாம் இல்

நாலடியார்- 193

என்பதில் உலோகங்கள் இருக்கும் இடத்தில் மரக்கிளைகள் வேர் பிடிக்காதது போல, பெறுதற்கரிய கல்வியும், சிறந்த அறிவும் செல்வம் உடையவரிடமே நிலைத்து நிற்கும் என்ற கருத்தை விளக்குகிறது. அதுபோல வேளாண்மை செய்யும் போது எந்த இடத்தில் எப்பயிர் நட்டால் அது செழித்து வளரும் என்பதை உணர்ந்து அதன்படி நடவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. ஒரு செயலைச் சரியான இடத்தில் செய்ய வேண்டும் என்ற நீதியை வலியுறுத்துகிறது. இப்பாடல் பொதுவாகப் பயிர் செய்யும் நிலத்தை ஆராய்ந்து செய்ய வேண்டும் என்கிறது.

## நீர் மேலாண்மை

வேளாண்மைக்கு ஆதாரம் நீராகும். அந்த நீரைச் சரியாகப் பயன்படுத்த அக்காலத்தில் குளம், கிணறு, ஏரி, போன்ற நீர்நிலைகளை அமைத்திருந்தனர். வேளாண்மைக்கு ஆதர மான குளங்களை மண் இட்டு, மதில்களைப் போல வலிமையாக அமைப்பது புண்ணிய மானதாகும். இதை,

மண்ணிட் டமைந்த மதில்போல வலிதாகப்

புண்ணிட் டமைந்த புலநீர்மேல் பொலிந்தன

கார்நாற்பது - 16

நீர்வரத்து சரியாக அமையாத குளம் எப்படி வறண்டு போகுமோ, வயிறாரத் தாய் பால் பருகாத குழந்தை எப்படி வலுவின்றி இருக்கு மோ, அதேபோல, தலைமுறை தலைமுறை யாகக் கல்வியறிவு இல்லாதவர்கள் வறுமை யில் வாடுவார்கள். என்ற கருத்தைத் திரிகடுகம்,

வாய்நன்கு அமையாக் குளனும், வயிறாரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும்,
சேய்மரபில்
கல்விமாண் பில்லாத மாந்தரும்,
இம்மூவர்
நல்குரவு காப்பவர் - 35

என்கிறது.

## நிலத்தின் தன்மை

நிலமே வேளாண்மைக்கு ஆதாரமாகும். அத்தகைய நிலத்தைப் பற்றி செய்திகள் பல்வேறு பாடல்களில் காணக்கிடைக்கிறது. நிலத்தின் நலத்தால் நெல் விளைவது போல, குல நலத்தால் சான்றோர் ஆவர் என்பதை நான்மணிக்கடிகை, “நில நலத்தால் நந்திய நெல்லே போல் தம்தம் குல நலத்தால் ஆகுவர் சான்றோர் கல நலத்தை" (பாடல்-16) என்ற பாடல் மூலம் வலியுறுத்துகிறது. நிலத்தின் வளமானது விளைச்சலுக்கு எவ்வளவு முக்கியமோ அதுபோல மனித வாழ்க்கைக்கு ஒழுக்கமும் பண்பும் முக்கியம் என்பதை உணர்த்துகிறது. நிலம் சார்ந்த உழைப்பும், விளைச்சலும் செல்வத்தின் அடிப்படையாகக் கருதப்பட்டதை

நிலம்பாக உழுவர் இழிபிறப்பவரேயாயினும்
மேலாயவர் பழமொழி நானூறு -247

என்ற பாடல் உணர்த்துகிறது.

## விருந்தோம்பல்

பழமொழி நானூறு வேளாண்மையை அறச் செயலான விருந்தோம்பலுடன் இணைத்துப் பேசுகிறது. நிலத்தை வளைத்து உழுது வேளாண்மை செய்தாலும், அந்த வருவாயைக் கொண்டு விருந்தினரைப் போற்றாதவனின் மேன்மை அழித்துவிடும் என்கிறது. வேளாண்மை செய்து அதன் பயனாய் விருந்தோம்புவதும் பின்வரும் பாடலில் குறிப்பிடப்படுகிறது.

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
எக்குற்ற மாகும் இறைக்கு? புலக்கொன்று
வேளாண்மை செய்தும் விருந்தோம்பல்
ஓம்பானை
நாளாண்மை கொல்லும் நனி. – 175

என்கிறது. இதன் மூலம் வேளாண்மையும் விருந்தோம்பல் சிறப்பும் விளக்கப்படுகிறது.

### நிலத்தைப் பண்படுத்துதல்

நிலத்தில் விதைப்பதற்கு முன்னர் நிலத்தை பண்படுத்த வேண்டும். நிலத்தைப் பண் படுத்தும் செயலை திருக்குறள் "ஒரு பலம் எடையுள்ள புழுதி, கால் பலம் ஆகும்படி நிலத்தை ஆழ உழுது, பண்படுத்தினால், அது பயிருக்கு உரமிடவதை விட மேலான ஒன்றாகும்" என்கிறது. இதை

**தொடிப்புழுதி கஃச உண்ணின் நன்செய்**
**களைகுழியில் தூம்பறுத் தற்று**-1035

என்பதால் அறியலாம். நிலத்தை ஆழ உழுவதன் முக்கியத்துவத்தை அறியமுடிகிறது. நல்ல விதைகளைத் தேர்ந்தெடுப்பது போல, நிலத்தையும் பண்படுத்த வேண்டும். கல்லாத வர்கள் கடலைப்போல் இருந்தாலும், அவர் களால் பயன் இல்லை. அதுபோல, நல்ல நிலத்தைப் பண்படுத்தாமல் காலம் வீணடிக்கப்படுதல் ஆகாது. இதை

**நிலத்தின்கண் நல்ல வித்துச் சேர்க**

**கலத்தின் கண் நல்லறிவு சேரும் நனி**
நான்மணிக்கடிகை - 31

என்பதால் அறியலாம். நிலத்தைப் பண்படுத்தி நல்ல விதைகளை இடுவதன் மூலம் கிடைக்கும் பலன் உவமையாகக் கூறப் படுகிறது. நிலத்தைப் பண்படுத்தலின் முக்கியத்துவத்தை இதன்மூலம் அறிய முடிகிறது.

### களை எடுத்தல்

ஓராண்டு விழும் களையானது தொடர்ந்து ஏழு ஆண்டுகள் இருக்கும் எனவே பயிர் பாதுகாப்பில் களை நீக்குவது என்பது முக்கியமான ஒன்றாகும். களைகளை நீக்கச் செல்லும் உழவரின் கைகள் களை பறிக்கத் தவறினால், அந்தப் பயிருக்கு வேறு எந்தப் பாதுகாப்பும் இல்லை. இதை,

**களைகளுப் போவோரின் கைகவிழ்ந்தா லல்லால்**
**பயிர்ப் புறம் காதில்லை யெனும்**— 1037

என்கிறது திருக்குறள். பயிர் நன்றாக வளர, களைகளை நீக்குவது மிக அவசியம் என்பதை இது காட்டுகிறது.

### பொருளும் வேளாண்மையும்

பொருள் இல்லாதவன் பிறருக்கு உதவி செய்ய விரும்புவது துன்பம் என்பது பொருளாகும். இதை

**பொருளிலான் வேளாண்மை காமுறுதல்**
இன்னா – இன்னா நாற்பது -36

என்ற அடிகள் வேளாண்மை செய்து பிறருக்குக் கொடுக்கும் உயர்ந்த நிலையை அடையப் பொருளாதார வளம் அவசியம் என்பதை அறியமுடிகிறது.

வேளாண்மை சார்ந்த அறநெறிகள், உணவுப் பகிர்வு, சுற்றத்தாரோடு நல்லுறவு போன்ற வாழ்க்கைக்கு அடிப்படையான பல கருத்துகளை உவமைகளாகவும், நீதிகளாகவும் அறநூல்கள் எடுத்துரைக்கின்றது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் உழவுத் தொழிலை வெறும் தொழிலாக மட்டும் பார்க்காமல், அறம், சமூகம் மற்றும் வாழ்வியலுடன் இணைந்த ஒரு உயர்வான செயலாகப் போற்றியதை அறியமுடிகிறது.

### துணைநூற் பட்டியல்

1. திருக்குறள் – வர்த்தமானன் பதிப்பகம், தியகராய நகர், சென்னை
2. நாலடியார் – வர்த்தமானன் பதிப்பகம், தியகராய நகர், சென்னை
3. நான்மணிக்கடிகை - வர்த்தமானன் பதிப்பகம், தியகராய நகர், சென்னை
4. இன்னா நாற்பது - வர்த்தமானன் பதிப்பகம், தியகராய நகர், சென்னை
5. இனியவை நாற்பது - வர்த்தமானன் பதிப்பகம், தியகராய நகர், சென்னை
6. திரிகடுகம் - வர்த்தமானன் பதிப்பகம், தியகராய நகர், சென்னை
7. பழமொழி நானூறு - வர்த்தமானன் பதிப்பகம், தியகராய நகர், சென்னை